பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 19 வெள்ளிக்கிழமை 05.11.2021 கதிர் 228

## கரவெட்டியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு!

(ந.லோகதயாளன்)

கரவெட்டியில் மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.

துன்னாலை, ஆண்டாள் வளவைச் சேர்ந்த வி.விஜிதரன் (வயது - 33) ☞2

# 'நவ. 20' போரினால் இறந்தோர் நினைவு

## வடக்கு - கிழக்கு ஆயர்கள் பேரவை அறிவிப்பு

(ந.லோகதயாளன்)

இவ்வருடம் நவம்பர் 20ஆம் திகதி சனிக்கிழமையைப் போரினால் இறந்தவர்களுக்காக மன்றாடுகின்ற சிறப்பு நாளாகக் கடைப்பிடிக்குமாறு வடக்கு – கிழக்கு ஆயர்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

வடக்கு – கிழக்கு ஆயர்கள் பேரவை இன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டு இந்த அழைப்பை விடுத்துள்ளது.

அன்றைய தினம் போரில் ஈடுபட்ட தரப்பினர், போரினால் இறந்துபோன மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், அரச பணியாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் நினைவு ☞2



## மீள்குடியேற்ற அமைப்பு பிரதிநிதிகளுடன் சுமந்திரன் சந்திப்பு

(ந.லோகதயாளன்)

வலிகாமம் வடக்கு, மயிலிட்டியில் மீள்குடியேற்ற அமைப்பு பிரதிநிதிகளுடன் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டிய ☞2



## போதை மாத்திரைகளை கடத்திய இருவர் கைது!

(ந.லோகதயாளன்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் போதை மாத்திரைகளைக் கடத்திச் சென்ற இருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளமையுடன், அவர்கள் கடத்தலுக்குப் பயன்படுத்திய இரு சொகுசு கார்களையும் ☞2

## அரச நியமனம் வழங்குமாறு வலியுறுத்தி ஆயுர்வேத வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம்

### வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்



(இ.கலையமுதன், ந.லோகதயாளன்)

ஆயுர்வேத வைத்தியர்களுக்கு அரசநியமனம் வழங்குமாறு வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஆர்ப்பாட்டமொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது. ☞2

## 'செல்பி' எடுக்க முயன்ற இளைஞர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழப்பு!

(வவுனியா நிருபர்)

'செல்பி' எடுக்க முயன்ற இளைஞர், ரயிலுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வவுனியா, செட்டிகுளம் தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட மெனிக்பாம், கல்லாறு பாலம் பகுதியில் இன்று காலை 8.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மத்திய ரயில் நிலையத்திலிருந்து அநுராதபுரம் ரயில் நிலையம் நோக்கிப் பயணத்தை ஆரம்பித்த ரயில் மெனிக் ☞2



### கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில்

## பயணப் பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண் அடையாளம்

சப்புகஸ்கந்த பகுதியில் பயணப் பையிலிருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்ட பெண் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் கொழும்பு, மாளிகாவத்தை தொடர்மாடி குடியிருப்பைச் சேர்ந்தவர் எனவும், அவருக்கு 42 வயது ☞2



## வவுனியாவில் தீபாவளியன்று 30 வன்முறைகள்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் தீபாவளி தினத்தன்று மதுபோதையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் ☞2



## மூன்று பிள்ளைகளின் தாய் அடித்துக்கொலை

### தீபாவளியன்று பயங்கரம்

நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட, வட்டவளை மவுன்ஜீன் தோட்டத்தில் பொல்லால் அடித்து மூன்று பிள்ளைகளின் தாய் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ☞2



## விக்கியை சந்தித்த செந்தில்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனை ☞2

## வாக்காளர் இடாப்பில் பதிவு செய்துகொள்ள இனி வீட்டு உரிமையாளரின் அனுமதி தேவையில்லை!

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அறிவிப்பு

வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்கு வீட்டு உரிமை தேவையில்லை. இந்தக் காரணங்களால் இதுவரை வாக்காளர்களாக பதிவு செய்துகொள்ள முடியாமல் போனவர்கள் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் தங்களை வாக்காளர் இடாப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.

-இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மீள் குடியேற்ற ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலப் பரப்புக்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேரில் ஆராய்ந்தார்.

இதன்போது வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் மற்றும் மீள்குடியேற்ற அமைப்பின் தலைவர் குணபாலசிங்கம் ஆகியோரும் உடனிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் மயிலிட்டியைச் சேர்ந்த மக்கள், சர்வதேச அழுத்தம் மற்றும் கூட்டமைப்பின் முயற்சியால் மயிலிட்டித் துறைமுகம் விடுவிக்கப்பட்டது. ஆனாலும், அதன் முழுமையான பயனை எமது மக்கள் அனுபவிக்க முடியவில்லை. இதேநேரம், துறைமுகத்தை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்விடம் உள்ள 216 ஏக்கர் நிலமும் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பிடியில் இருப்பதால் மீனவர் சமூகம் மிகவும் பாதிப்பை எதிர்நோக்குகின்றனர் என்று சுட்டிக்காட்டினர்.

## போதை மாத்திரைகளை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரச நியமனம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலையற்ற பட்டதாரிகள் ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்குமாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக இன்று மதியம் 12 மணிக்கு நடைபெற்ற போராட்டத்தில் வேலையற்ற ஆயுர்வேத பட்டதாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது ஜனாதிபதி அவர்களே! பிரதமர் அவர்களே!! அனைத்து சித்த வைத்திய பட்டதாரிகளுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பை வழங்கு, ஆயுர்வேத வைத்தியர் குறைபாட்டை உடனடியாக நிவர்த்தி செய்,தேர்தல் வாக்குறுதி வெறும் பேச்சில் மட்டுமா?, பட்டதாரிகளின் பட்டம் வீட்டில் முடக்கப்படுமா?, இன்னும் எத்தனை காலம்தான் இழுத்தடிப்பு?, சுதேச மருத்துவம் அரசுக்கு தேவையில்லையா?, சேதனப்பசளையை ஊக்குவிக்கும் அரசு சுதேச மருத்துவத்தை நிராகரிப்பது ஏன்? போன்ற கோஷங்களைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பினர்.

போராட்டத்தின் பின்னர் வடக்கு மாகாண ஆளுநருக்கும் யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபருக்கும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## விக்கியை சந்தித்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் உப தலைவரும் பிரதமரின் மலையகத்துக்கான ஒருங்கிணைப்பு செயலாளருமான செந்தில்தொண்டமான் இன்று சந்தித்தார்.

கோயில் வீதியிலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

குறித்த சந்திப்பின் பின் கருத்துத் தெரிவித்த செந்தில் தொண்டமான்,

விக்னேஸ்வரன் எம்.பி. எமது குடும்பத்துடன் நெருக்கமாக உறவு உள்ள ஒருவர். அவரை நீண்டகாலமாக எனக்குத் தெரியும் அதன் அடிப்படையில் ஒரு சிநேகபூர்வமான சந்திப்பாகவே இன்று அவரைச் சந்தித்துள்ளேன்.

அரசியல் ரீதியாக எந்த விடயமும் நாம் பேசிக் கொள்ளவில்லை. ஒரு சிநேகபூர்வமாகத்தான் நான் அவருடன் கலந்துரையாடினேன் - என்றார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், எமது நீண்டகால நண்பர் சிநேகபூர்வமான சந்திப்பை மேற்கொண்டார். ஆனால், நான் அரசுடன் மாறிவிட்டேன்; அரசுடன் சேர்ந்து விட்டேன் என்று சிலர் நினைப்பார்கள். நாங்கள் அவ்வாறு ஒன்றும் பேசவில்லை. நாங்கள் சிநேகபூர்வமாக சில விடயங்களைப் பேசினோம் - என்றார்.

## கரவெட்டியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார்

கரவெட்டி வடக்கில் உள்ள வீடொன்றில் இன்று பிற்பகல் வீட்டுக் கூரை வேலையில் ஈடுபட்டிருந்தபோது தகரம் ஒன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## 'செல்பி' எடுக்க .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாம் கல்லாறு பாலத்தை அண்மித்துள்ளது. இதன்போது கல்லாறு பாலத்தில் இரு இளைஞர்கள் 'செல்பி' எடுத்துக் கொண்டிருந்துள்ளனர்.

ரயில் வருகின்றமையை அவதானித்த ஓர் இளைஞர் ஆற்றினுள் குதித்ததுடன் மற்றைய இளைஞர் ரயிலுடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் செட்டிகுளம் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின்னர் சடலம் நோயாளர் காவு வண்டி மூலம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்விபத்தில் 21 வயதுடைய முருங்கன் பகுதியைச் சேர்ந்த சுரேஸ் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (100)

## 'நவ. 20' போரினால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூர்ந்து இறைவேண்டல் புரிய ஆயர்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம் என்று வடக்கு - கிழக்கு ஆயர்கள் பேரவை தெரிவித்துள்ளது.

திருகோணமலை ஆயர் வண. நோயல் இம்மானுவேல் ஆண்டகை, யாழ். ஆயர் வண. யஸ்ரின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, மன்னார் ஆயர் வண. இமானுவேல் பெர்ணாண்டோ ஆண்டகை, மட்டக்களப்பு ஆயர் வண. ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் கையெழுத்திட்டு மேற்படி அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

## பயணப் பையிலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் பொலிஸார் தகவல் வெளியிட்டுள்ளனர்.

சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள கழிவுப் பொருள்களுடன் காணப்பட்ட பயணப் பையொன்று நேற்று மீட்கப்பட்டிருந்தது.

அதற்குள் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் இருந்துள்ளது. இந்தச் சம்பவமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன. அக்குழுக்களால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் பிரகாரமே, சடலம் யாருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் மீதான சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனை இன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## வவுனியாவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்கள் உட்பட 30 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவங்களால் பலர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த வன்முறைகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலர் கைதாகியுள்ளமையுடன், மேலும் சிலர் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இளைஞர்களிடையிலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (100)

## மூன்று பிள்ளைகளின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயல் குடும்பத்துக்குத் தனது குடும்பத்துக்கும் ஏற்பட்ட கைகலப்பை சமரசப்படுத்தச் சென்ற பெண்ணே பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தாயான சந்திரசேகரன் கலாதேவி (வயது 57) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று வட்டவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் வட்டவளை வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ஹற்றன் நீதிமன்ற நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை ஹற்றன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## வாக்காளர் இடாப்பில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு சாதாரண பதிவு முகவரியில் வாக்கு உரிமையாளராகப் பதிவு செய்துகொள்வதற்காகத் தகுதியுடைய அனைத்துப் பிரஜைகளுக்கும் உரிமை இருக்கின்றது.

வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்காக 2021ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு சாதாரண பதிவு மாத்திரம் போதுமானது. சொத்துரிமை தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

வாடகை அல்லது குத்தகை வீடுகள் மற்றும் சட்டவிரோத பதிவாளர்கள் ஏனைய தகுதிகளைப் பூரணப்படுத்தி இருந்தால், அவர் சாதாரண முகவரியில் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள முடியும். அதற்காக வீட்டு உரிமையாளர்களின் விருப்பம் அல்லது இணக்கம் தேவையில்லை.

பிரஜை ஒருவருக்கு விட்டுக்கொடுக்க முடியாத இறையாண்மை அதிகாரத்துக்கு வாக்களிக்கும் அதிகாரமும் உள்வாங்கப்பட்டிருக்கின்றது. வாக்களிக்கும் அதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கு வாக்குரிமை பெயர்ப்பட்டியலில் பெயர் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும்.

வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்காகப் பிரஜைகளுக்குத் தடைகளை ஏற்படுத்துவது நீதிமன்றத்தால் தண்டம் அல்லது சிறைப்படுத்தல் அல்லது இந்த இரண்டுக்கும் கீழ்ப்படிய வேண்டிய குற்றமாகும்.

வாடகை அல்லது குத்தகை வீடுகள் மற்றும் சட்டவிரோத பதிவாளர்கள் வாக்காளராகப் பதிவு செய்துகொள்வது, பிரஜைகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கு மாத்திரமாகும்.

இவ்வாறு பதிவு செய்வது சொத்து உரிமை அல்லது நிரந்தர பதிவை உறுதிப்படுத்துவதற்கு அல்ல என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

இவ்வாறான பிரச்சினை காரணமாக வாக்காளராகப் பதிவு செய்து கொள்வதற்கு முடியாமல்போனவர்கள் யாராவது இருந்தால், 2021.11.17ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட தேர்தல் காரியாலயத்தில் உங்களது கோரிக்கையை சமர்ப்பிக்க முடியும்.

உங்களுக்குத் தேவையான உரிமை கோரல் பத்திரங்கள் அனைத்து கிராம சேவகர் காரியாலயம், பிரதேச செயலாளர் காரியாலயம் மற்றும் மாகாண காரியாலயங்கள் அல்லது மாவட்ட தேர்தல் காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

அதேபோன்று www.elections.gov.lk என்ற எமது இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் 011 2860031 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் - என்றுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## வொஷிங்டன் பேச்சுக்களின் விளைவு

**தமிழர் தரப்பின் சட்ட நிபுணர் குழுவை கலந்துரையாடலுக்கு அமெரிக்கா அழைத்திருப்பதுதான் இப்போது தமிழர் அரசியலில் பிரதான பேசுபொருள்.**

**வழமைபோல அதையொட்டிய பிய்ச்சல், பிடுங்கல்களை இனி அடுத்து வரும் நாள்களில் எதிர்பார்க்கலாம்.**

**எங்களுக்கு தெரியாமல் அமெரிக்கத் தரப்புடன் சம்பந்தன் – சுமந்திரன் அணி இரகசியத் தொடர்பாடல் வைத்து, அரசியல் பேச்சுக்கள் நடத்தி, விடயங்களை கையாண்டிருக்கிறார்கள், இது தவறல்லவா என்று கூட்டுக்குள் முனகல்கள் இனி கேட்கத் தொடங்கிவிடும்.**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துங்கள் என்று இந்தக் கட்டத்தில் இந்தியாவை வலிந்து போய் வற்புறுத்த வேண்டிய தேவை ஏதுமில்லை, அதைவிட நாம் ஒற்றுமையாக இருப்பதுதான் முக்கியம் என்று அரசியலில் 'கிழட்டுப் புலி' சம்பந்தன் கூறியபோது, அதனை விளங்காமல், வரக்கூடிய மாகாணசபைத் தேர்தலில் எப்படி முதலமைச்சர் வேட்பாளர் பதவியை பெறுவது, எப்படி உறுப்பினராவது என்ற குறுகிய நோக்கத்தை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு, அரசியல் நகர்த்தல்களில் ஈடுபட்ட தரப்புகள், இப்போது அலமலங்கிப் போய் நிற்கும் என்பது எதிர்பார்க்கத் தக்கதே. அதனால் தங்களுக்கு தெரியாமல் – தங்களை விட்டு விட்டு– சம்பந்தனும் சுமந்திரனும் தம்மிஷ்டப்படி காய் நகர்த்துகிறார்கள் என்று புராணம் பாட அவர்கள் தொடங்குவார்கள். அப்படி அரசியல் செய்வதற்குதான் அவர்களுக்கு இடம் உண்டு. அப்படியே அவர்கள் நடக்கட்டும். விட்டுவிடுவோம்.**

**தமிழர் தரப்பின் சட்ட நிபுணர் குழு வரும் 15 ஆம் திகதி வொஷிங்டன் டி.ஸியில் அமெரிக்கத் தரப்புடன் பேச்சு நடத்த இருக்கின்றது. அமெரிக்க சட்ட நிபுணர்களுடன் பேச்சு என்று செய்திகள் வெளியே கசிய விடப்பட்டாலும் உண்மையில், உயர்மட்ட அரசியல் தீர்மானங்களை எடுக்கக்கூடிய தரப்பினருடனும் பேச்சு நடக்கும் என விடயமறிந்த வட்டாரங்கள் உறுதி செய்தன.**

**அமெரிக்காவில் ஜனநாயக கட்சியின் ஜோ பைடன் ஆட்சிக் கட்டில் ஏறிய பின்னர், தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் அம்மையார் உப ஜனாதிபதியாக இருக்கையில், தமிழர் தரப்பை அழைத்து, அமெரிக்கா நேரடியாகப் பேசுவது மிக முக்கிய விடயமாக நோக்கப்படுகிறது.**

**இந்த முயற்சிக்கு அமெரிக்கா – இந்தியா – ஜப்பான் – ஆஸ்திரேலியா ஆகியவை ஒன்று சேர்ந்து புதிதாக அமைத்திருக்கும் குவாட் அமைப்பின் ஆசிர்வாதம் இருக்கின்றது என்ற தகவலும் –**

**இந்தியத் தரப்பின் இணக்கம் மற்றும் ஒத்துழைப்புடன் தான் இந்த விடயங்கள் நகர்த்தப்படுகின்றன என்பதும் –இலங்கை அரசுக்கும் சில உயர் மட்டங்களில் இத்தகைய விடயங்கள் கட்டவிழ்கின்றமை குறித்து முற்கூட்டியே கோடி காட்டி விட்டே அவை சம்பந்தப்பட்ட தரப்பினால் முன்னெடுக்கப்படுகின்றன என்ற செய்தியும் –**

**இப்போது கட்டவிழ்வது அமெரிக்க – இந்திய கூட்டு மேலதிகாரத்தில் நிகழும் ஒரு விடயம் என்ற உறுதிப்பாட்டை கொழும்புக்கு தந்து நிற்கின்றன.**

**அமெரிக்காவில் நடக்கக்கூடிய இந்தப் பேச்சுக்களின் பெறுபேறு – விளைவு – இரண்டு தளங்களில் –தடங்களில் – நிச்சயம் எதிரொலிக்கும் என்பது உறுதி.**

**ஒன்று – ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற தளங்களில் கொழும்புக்கு எதிரான கடும் அழுத்தமாக விடயங்கள் ஒப்பேறலாம்.**

**அடுத்தது – நேரடியாக இந்திய – அமெரிக்கக் கூட்டு விவகாரமாக இனி இலங்கை மீதான அழுத்தங்கள் வெளிவரலாம்.**

**எது, எப்படியோ விவகாரம் கொழும்பு ஆட்சிக்கு எதிரான காட்டமான அழுத்தமாக முன்நகரும். அது தடுக்க முடியாத – தவிர்க்க இயலாத – கட்டாயமாக இருக்கும்.**

# தேர்தல் வாக்குறுதியை கைவிட்டுள்ளார் விக்கி!

### காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் தெரிவிப்பு



சி.வி.விக்னேஸ்வரன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சர்வஜன வாக்கெடுப்பு கோரினார். இப்போது சர்வஜன வாக்கெடுப்பை கைவிட்டு சமஷ்டி நிலை கேட்கிறார். தமிழர்களை குழப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். அரசியல் தீர்வுக்கான வாக்கெடுப்பு என்ற தேர்தல் வாக்குறுதியுடன் அவர் நிலைத்திருக்க வேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

தீபாவளியை முன்னிட்டு வவுனியாவில் ஊடகங்களுக்கு நேற்று (வியாழக்கிழமை) கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்ட எமது தமிழ் குழந்தைகளை மீட்பதற்கான எமது தொடர் போராட்டம் இன்று (நேற்று) 1,722 ஆவது நாளாகும். இன்று (நேற்று) நரகாசூரனை வதம் செய்த தீபாவளி திருநாள். ஆனால் இன்று நம்மைச் சுற்றி நரகாசூரன்கள் பலர் இருக்கிறார்கள்.

ஐ.சி.சி. தமிழர்களின் இனப்படுகொலை வழக்கை பரிசீலித்து வருகின்ற இந்நேரத்தில், தமிழர்கள் சரியான நேரத்துக்காகக் காத்திருக்க வேண்டும். நாம் உலகை நோக்கும் போது, இனப்படுகொலையாளிகள் மீது சர்வதேச குற்றங்கள் சுமத்தப்படும் போது, பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் விரும்பியவாறு அரசியல் உரிமைகளைக் கோர முடிந்தது. தென் சூடான், கிழக்கு தீமோர், போஸ்னியா மற்றும் இனப் போர் நடந்த பிற நாடுகளில் இவைகள் நடந்தன.

சி.வி.விக்னேஸ்வரன் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சர்வஜன வாக்கெடுப்பு கோரினார். இப்போது சர்வஜன வாக்கெடுப்பை கைவிட்டு சமஷ்டி நிலை கேட்கிறார். தமிழர்களைக் குழப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம். அரசியல் தீர்வுக்கான வாக்கெடுப்பு என்ற தேர்தல் வாக்குறுதியுடன் அவர் நிலைத்திருக்க வேண்டும். இனப்படுகொலைகள் மீண்டும் நிகழாமல் தமிழர்களைப் பாதுகாப்பது இந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கடமை.

1958, 1960, 1977, 1983 மற்றும் 2009 போன்ற தொடர் நிகழ்வுகளை சிங்களத்தின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புகளுடன் நிறுத்துவதே தமிழ் மக்களுக்குத் தேவை. தமிழர்களைப் பாதுகாக்க, இலங்கை அரசால் திரும்பப் பெற முடியாத பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட வடக்கு– கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தேவை.

யாழ்ப்பாணத்தில் கட்சிகள் ஒன்று கூடி 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியாவை வலியுறுத்தினர். கடந்த 34 ஆண்டுகளாக இலங்கையின் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு இந்தியா இலங்கையை வற்புறுத்தவில்லை என்பதை இந்தக் கட்சிகள் அறிந்து கொள்ள வேண்டும். இலங்கையை 13ஐ நடைமுறைப்படுத்துமாறு இந்தியா ஒரு போதும் வற்புறுத்தாது.

1987 இல் இந்த 13 ஆவது திருத்தம் அமிர்தலிங்கம் மற்றும் சம்பந்தரால் நிராகரிக்கப்பட்டது. '13 பிளஸ் சட்டமூலமும் மாகாண சபை சட்டமூலமும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவில்லை' என்பதே அவர்கள் கூறிய காரணம்.

13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சி அரசின் கீழ் உள்ளது. அது தமிழர்களைப் பாதுகாக்காது. இந்தத் தமிழ்க் கட்சிகள் தாம் ஆட்சியில் அமர்வதற்காக எம்மை ஏமாற்றுகின்றன அல்லது மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயற்சிக்கின்றன. 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களை மேலும் பாதிப்படையச் செய்யும்.

இந்த அரசியல் வாதிகள் இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. ஆகிய நாடுகளுக்குத் தமிழர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒரே வழி, மீளப் பெற முடியாத பாதுகாப்பான மற்றும் பாதுகாக்கப்பட்ட வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் தேவை எனக் கேட்க வேண்டும். 13 ஆவது திருத்தச் சட்டம் சிங்கள அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து எம்மைப் பாதுகாக்காது என்பதை இந்தக் கட்சிகளுக்குச் சொல்ல விரும்புகின்றோம். ஐ.சி.சி. எங்கள் வழக்கைப் பார்க்கும் வேளை, இது ஒரு நல்ல நேரம். மீண்டும் மீண்டும் நடக்கும் இனப்படுகொலையில் இருந்து சரியான பாதுகாப்பை வலுவான தீர்வை கேட்கும் நேரம், அதாவது வாக்கெடுப்பை கேளுங்கள். –எனத் தெரிவித்தார்.

# யாழில் விபத்து; ஒருவர் காயம்

*வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலிசெட்டியார் மடம் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.*

*நேற்று இரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் தெரியவருகையில்-*

*துணைவியிலிருந்து செட்டியார் மடம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞன், அராலியில் இருந்து சென்று செட்டியார் மடம் சந்தியால் திரும்பிய ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.*

*விபத்தைத் தொடர்ந்து ஓட்டோவின் சாரதி தப்பிச் சென்றுள்ளார். இந்த நிலையில் காயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# வடமாகாண ஆளுநர் ஜீவன் வவுனியா சிறைக்கு விஜயம்

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வவுனியா சிறைச்சாலைக்கு நேற்று (வியாழக் கிழமை) விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது வவுனியா சிறைச்சாலையின் நிலைமைகளை அவதானித்த ஆளுநர், சிறைச்சாலையின் தற்போதைய நிலை மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களுடனும் கலந்துரையாடியதுடன், கைதிகளையும் பார்வையிட்டு இருந்தார்.

இதேவேளை, குறித்த விஜயம் ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் வவுனியாவில் மேற்கொண்ட முதலாவது விஜயம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானில் வெளிநாட்டுப் பணங்களை பயன்படுத்த தடை!



ஆப்கானிஸ்தானில் வெளிநாட்டுப் பணங்களை பயன்படுத்த, தலிபான் அரசாங்கம் தடை விதித்துள்ளது.

பொருளாதார நிலைமையையும், தேசிய நலன்களையும் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தலிபான் அமைப்பு கூறியுள்ளது.

இதுகுறித்து தலிபான் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா முஜாகித் கூறுகையில், 'அனைத்து குடிமக்களும், கடைக்காரர்களும், வியாபாரிகளும், தொழில் அதிபர்களும், பொதுமக்களும் இனி எல்லா பரிமாற்றங்களையும் ஆப்கானியைக்கொண்டு (ஆப்கானிஸ்தான் பணம்) மட்டுமே செய்ய வேண்டும்.


வெளிநாட்டுப் பணங்களை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. யாரேனும் மீறிப் பயன்படுத்தினால் சட்டப்பூர்வமான நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டியது வரும்' என கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தான் தலிபான்கள் வசமாகியதையடுத்து பல்லாயிரம் கோடி மதிப்பிலான ஆப்கானிஸ்தானின் வெளிநாட்டு சொத்துகளை அமெரிக்க ரிசர்வ் வங்கியும், ஐரோப்பிய மத்திய வங்கிகளும் முடக்கி உள்ளன.

சர்வதேச நிதியமும், உலக வங்கியும் கூட ஆப்கானிஸ்தானுக்கு எந்த நிதி உதவியும் செய்ய முன்வரவில்லை.

இதனால், ஆப்கானிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகின்ற நிலையில், தலிபான்களின் இந்த புதிய அறிவிப்பு நெருக்கடியை ஏற்படுத்தவுள்ளது.

# அத்தியாவசிய பொருள்களை வாங்கிக் குவிக்கும் சீன மக்கள்



ஒருவேளை அவசர நிலை ஏற்பட்டால் அப்போது பயன்படுத்துவதற்கு தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்களை சேகரித்து வைத்துக் கொள்ளுமாறு சீன அரசாங்கம் அந்நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால் இந்த அறிவிப்பு ஏன் வெளியிடப்பட்டது என்று, அதை வெளியிட்ட சீன வர்த்தக அமைச்சகம் காரணம் எதையும் தெரிவிக்கவில்லை.

சீனாவின் பல்வேறு பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பொதுமுடக்கம் மற்றும் வழக்கத்திற்கு மாறான அதிக மழையால் பயிர்கள் பாதிப்படைந்துள்ளதால் தடைப்பட்டுள்ள காய்கறி விநியோகம் ஆகியவற்றுக்கு நடுவே சீன அரசின் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ளது.

உணவுப்பொருள்களுக்கான விநியோகச் சங்கிலி சீராக இருப்பதையும், உணவுப் பொருள்களின் விலை ஏறாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று உள்ளூர் அதிகாரிகளுக்கு சீன வர்த்தக அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது

# கிளாஸ்கோவில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய ஐந்து ஆர்வலர்கள் கைதாகினர்




கிளாஸ்கோவில், நூற்றுக்கணக்கான காலநிலை மாற்ற எதிர்ப்பாளர்கள் அணிவகுத்துச் சென்ற பேரணியில், ஐந்து ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எஸ்.எஸ்.இ. எரிசக்தி நிறுவனத்திற்கு வெளியே இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இரண்டு ஆர்வலர்கள் கட்டிடத்திற்குள் நுழைய முயன்றதால், மோதல் வெடித்தது.

இதன்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மீது ஸ்ப்ரே அடித்ததாக ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர்.

எனினும், கார்ப்பரேட் 'கிரீன்வாஷிங்'க்கு எதிரான பெரும்பாலான ஆர்ப்பாட்டங்கள் அமைதியான முறையில் நடந்தன. ஏனெனில் அணிவகுப்பாளர்களுடன் அதிகாரிகள் இருந்தனர்.

# 2030 இற்குள் 1,000 அணு ஆயுதங்களை சீனா வைத்திருக்கும் என பென்டகன் கணிப்பு!

*எதிர்பார்த்ததைவிட, அணு ஆயுதங்களை அதி விரைவாக பெருக்கிவரும் சீனா 2030ஆம் ஆண்டுக்குள் 1,000 அணு ஆயுதங்களை வைத்திருக்கும் என அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் கணித்துள்ளது.*

*இதுதொடர்பாக பென்டகன் வெளியிட்ட அறிக்கையில், '2027ஆம் ஆண்டுக்குள், 700 அணு ஆயுதங்களை சீனா தயாராக வைத்திருக்கும். 2030ஆம் ஆண்டுக்குள் 1,000 அணு ஆயுதங்களை வைத்திருக்கும். ஓராண்டுக்கு முன்பு கணித்ததைவிட 2.5 மடங்கு அதிக எண்ணிக்கையில் அணு ஆயுதங்களை கொண்டிருக்கும்.*

*நிலம், கடல், காற்று ஆகியவைற்றை சார்ந்த அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதிலும் அணு ஆயுதப்படைகளின் விரிவாக்கத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதிலும் சீனா முதலீடு செய்துவருகிறது.*

*அமெரிக்க, ரஷ்யா ஆகிய முன்னணி அணு ஆயுத நாடுகளை போன்று அணு ஆயுத முப்படைகளை சீனா கட்டமைத்துவருகிறது. அதாவது, நிலத்திலிருந்து பெரும் தொலைவிற்குப் பாயும் ஏவுகணைகள், வானிலிருந்து பாயும் ஏவுகணைகள், ஆழ்கடலில் இருந்து பாயும் ஏவுகணைகள் ஆகியவற்றை தயாரித்துவருகிறது.*

*சீனாவின் அணு ஆயுத எதிரி நாடுகளில் முதன்மை நாடான அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதலை மேற்கொள்ளும் திறனை வளர்த்துகொள்ள அந்நாடு முயலவில்லை. ஆனால், மற்ற நாடுகள் தாக்குதல் நடத்தாதவாறும் அப்படி நடத்தப்பட்டால் பின் விளைவுகள் சந்திக்க நேரிடும் என அச்சுறுத்துதல் விடுப்பதற்காகவும் சீனா இப்படி செய்துவருகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சீனாவின் இராணுவ வளர்ச்சி குறித்த அறிக்கையை அமெரிக்க பாதுகாப்புத்துறை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த நிலையில், சீனாவின் இராணுவ தகவல்கள் வெளியாகியுள்ளன.*

*சீனாவிடம் 200 அணு ஆயுதங்கள் தயாராக இருக்கின்றன என்றும் 2030ஆம் ஆண்டுக்குள் இது இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்றும் பென்டகன் ஓராண்டுக்கு முன்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*




# டமாஸ்கஸின் பகுதியை குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்

சிரிய தலைநகர் டமாஸ்கஸின் புறநகரில் உள்ள ஒரு பகுதியை குறிவைத்து இஸ்ரேல் பல ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ள சிரிய அரச செய்தி நிறுவனமான சனா, இதனால் பொருள்சேதம் மட்டுமே ஏற்பட்டதாக கூறியுள்ளது.

ஈரான் ஆதரவு போராளிகளின் இராணுவ நிலைகள் மற்றும் ஆயுதக் கிடங்குகள் இலக்குகளை குறிவைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக பிரிட்டனைத்தளமாகக்கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு கூறியுள்ளது.

கடந்த சனிக்கிழமை, சிரியாவின் தலைநகரின் புறநகர் பகுதிகளை நோக்கி இஸ்ரேலிய ஏவுகணை தாக்குதலை நடத்தியது என்றும் இருப்பினும் அவை சிரியாவினால் தடுக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.

ஒக்ரோபர் 14 அன்று, மத்திய சிரியாவில் ஈரானிய நிலைகள் மீது இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் சிரிய அரசாங்கத்துடன் இணைந்த ஒன்பது போராளிகளும் கொல்லப்பட்டனர்.

நாட்டின் தெற்கில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக சிரியா குற்றம் சாட்டிய சில நாள்களுக்குப் பின்னர் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

# ஆதிசங்கராச்சாரியாரின் 12 அடி உயர சிலையை கேதார்நாத்தில் திறந்து வைத்தார் பிரதமர் மோடி



உத்தரகாண்ட் கேதார்நாத்தில் ஆதிசங்கராச்சாரியாரின் 12 அடி உயர சிலையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்துவைத்தார்.

டெல்லியிலிருந்து இன்று காலை தனி விமானம் மூலம் உத்தரகாண்ட் சென்ற பிரதமர் நரேந்திர மோடி அங்கிருந்து கேதார்நாத் புறப்பட்டார். டேராடூன் விமான நிலையத்தில் மோடியை அம்மாநில ஆளுநர் குர்மித் சிங் மற்றும் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி ஆகியோர் வரவேற்றனர். கேதார்நாத் சிவன் கோவிலில் தீபாராதனை செய்து வழிபட்டார். தொடர்ந்து அவர் 12 அடி உயர ஆதிசங்கராச்சாரியாரின் உருவச் சிலையை திறந்துவைத்து, புதுப்பிக்கப்பட்ட சமாதி ஸ்தலத்தையும் திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய இந்தியப் பிரதமர் மோடி, ‘‘சமுதாய நன்மைக்காக ஆதிசங்கரர் புதிய குறிக்கோளுடன் செயல்பட்டார். சமஸ்கிருதத்தில் உள்ள வேதங்களை வரும் தலைமுறையினருக்கு நாம் கொண்டு செல்ல வேண்டும். தீர்த்த யாத்திரை மூலம் நமது கலாச்சாரங்களை தெரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. யாத்திரையின் வாயிலாக கிடைப்பது மகிழ்ச்சி மட்டும் அல்ல பாரம்பரியமும் தான். கேதார்நாத் ஜோதி லிங்கத்தை வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசிக்க வேண்டும். இன்று அயோத்தியாவில் ராமருடைய கோவில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வருகிறது.

அயோத்தியாவுக்கு இந்த கௌரவம் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு கிடைத்துள்ளது. அதே நேரத்தில் ஆதி சங்கரரின் எண்ணங்கள் நமக்கு உத்வேகத்தை அளிக்கின்றன. உத்தரப்பிரதேச மாநிலம் குஷிநகர் உள்ளிட்ட முக்கிய இடங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவருவதற்காக பல்வேறு தலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. புத்த கயா உள்ளிட்ட ஆன்மீக தலங்கள் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வெகுவாக ஈர்க்கின்றன. அதே போல் இந்தியாவின் கலாசார பெருமையை உலகமே வியந்து பார்க்கிறது” என்று தெரிவித்திருக்கிறார்.

## இரவு நேரத்தில் அதிக பட்டாசுகள் வெடிப்பு தமிழகம் முழுதும் அதிகரித்த காற்று மாசு

தீபாவளிப் பண்டிகையையொட்டி இரவு நேரத்தில் அதிகளவில் பட்டாசுகள் வெடிக்கப்பட்டமையால், தமிழகம் முழுவதும் உள்ள நகரங்களில் காற்றின் மாசுபாடு அதிகரித்துள்ளது.



சென்னையில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை இரவு நேரத்தில் பட்டாசு வெடிப்பதற்கான அனுமதிகொடுக்கப்பட்டதனால் தற்போது சென்னை நகரின் காற்று மாசுபாட்டின் அளவு மிதமான நிலையிலிருந்து அடுத்த கட்டமான எச்சரிக்கை நிலைக்குச் சென்றுள்ளது. தற்போது சென்னை நகரில் காற்று மாசுபாட்டின் அளவு 100 முதல் 150 என்கிற அளவில் உள்ளது, இது மோசமான அளவாகும்.

அதிகபட்சமாக வட சென்னையில் உள்ள மணலியில் 344 குறியீடும், நுங்கம்பாக்கத்தில் 272 என்கிற குறியீடும் பதிவாகியுள்ளன. வட சென்னையை விட தென் சென்னையில் காற்று மாசுபாடு அளவு குறைவாகவே உள்ளது. மதுரையில் காற்று மாசுபாட்டின் அளவு 188 குறியீடு என்கின்ற அளவிலும், கோவையில் 178, சேலத்தில் 275, திருப்பூரில் 233, தூத்துக்குடியில் 45 என்கிற அளவுகளில் பதிவாகியிருக்கிறது. அதிகபட்சமாக திருச்சியில் 321, வேலூரில் 318 என்கிற அளவுகளில் தற்போது வரை பதிவாகியுள்ளன.

காற்று மாசுபாடு குறித்து உலக சூழலியல் அமைப்போடு தனியார் தன்னார்வ அமைப்பு இணைந்து நடத்தி வரும் காற்று மாசுபாட்டின் அளவீடுகள் மூலமாக இந்தத் தகவல்கள் தெரிய வந்துள்ளன.



## முல்லைப் பெரியாறு அணை விவகாரம்; தமிழக அமைச்சர்கள் நேரில் ஆய்வு

முல்லைப் பெரியாறு அணையில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழக அமைச்சர்கள் குழு நேரில் ஆய்வுசெய்து வருகிறது.

அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, பி. மூர்த்தி, சக்கரபாணியும் படகில் சென்று முல்லை பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அணையின் நீர்மட்டம் 138.50 அடியை கடந்துள்ள நிலையில் இந்த ஆய்வு நடைபெறுகிறது. அணை நீர்மட்டத்தினை 138.50 அடியில் வரும் 11 ஆம் திகதி வரை நிலைநிறுத்திக்கொள்ள உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில், முன்னதாகவே கேரளாவிற்கு உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளமை தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே எதிர்ப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ள நிலையில், இந்த ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

## ஷாருக்கானின் மகனை விடுவிக்க 25 கோடி ரூபா பேரம் போதைப்பொருள் வழக்கில் கிடைத்தது ஆதாரம்!



இந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கடந்த மாதம் 2 ஆம் திகதி மும்பை - கோவா சொகுசு கப்பலில் நடத்திய சோதனையில், போதை விருந்தில் பங்கேற்றார் எனத் தெரிவிக்கப்பட்ட நடிகர் ஷாருக்கானின் மகன் ஆர்யன் கான் உள்ளிட்டவர்களை கைது செய்தனர். ஆர்யன்கானை கைதுசெய்த போதைப்பொருள் தடுப்பு பிரிவின் மும்பை மண்டல இயக்குநர் சமீர் வான்கடே மீது மராட்டிய மந்திரி நவாப் மாலிக் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளைக் கூறிவந்தார். குறிப்பாக சொகுசுக் கப்பலில் நடத்தப்பட்ட சோதனை போலியானது என அவர் ஊடகங்களிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்தநிலையில் சொகுசுக் கப்பல் போதைப் பொருள் வழக்கில், பொதுச் சாட்சியான பிரபாகர் சாயில் என்பவர் பரபரப்பு குற்றச்சாட்டு ஒன்றை தெரிவித்திருந்தார். அதில், அவர் போதைப்பொருள் வழக்கில் ஆர்யன் கானை விடுவிக்க ரூபா 25 கோடி பேரம் நடந்ததாகக் குறிப்பிட்டார். இந்த பேரம் தொடர்பாக போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் மற்றொரு முக்கிய சாட்சியான கிரன் கோசவி மற்றும் சாம் டிசோசா, ஷாருக்கானின் மேலாளர் பூஜா தத்லானி ஆகியோர் லோயர் பரேல் பகுதியில் ஒக்டோபர் 3 ஆம் திகதியன்று சந்தித்துப் பேசினர் எனவும் அவர் கூறியிருந்தார்.

பிரபாகர் சாயிலின் குற்றச்சாட்டுக் குறித்து மும்பை சிறப்புப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பிரபாகர் சாயிலின் குற்றச்சாட்டில் கூறியதுபோல, கடந்த 3 ஆம் திகதி, லோயர் பரேல் பகுதியில் உள்ள வணிகவளாகத்தின் அருகில் ஷாருக்கானின் மேலாளர் பூஜா தத்லானி, கிரன் கோசவி மற்றும் சாம் டிசோசா ஆகியோர் சந்தித்தமையை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இதில் பூஜா தத்லானியின் கார் என கூறப்படும் நீல நிற மெர்சிடஸ் பென்ஸ் காரில் இருந்து இறங்கும் பெண் ஒருவர், கிரன் கோசவியிடம் பேசும் காட்சிகள் அந்தப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளன.

பின்னர் கிரன் கோசவி, அந்த பெண், சாம் டிசோசா ஆகிய மூவரும் அவர்களது வாகனங்களில் தனித்தனியாக அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

இதுகுறித்து, இந்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், கண்காணிப்பு கமராவில் பதிவான காட்சிகளில் மூவரும் சந்தித்துப் பேசியமை மட்டும் தெரிகிறது. ஆனால், அவர்கள் என்ன பேசினார்கள் என்பது பற்றிய விவரங்களை அறியமுடியவில்லை. இது குறித்து விசாரிக்க சாம் டிசோசாவை தொடர்பு கொண்டோம். ஆனால், அவர் பதில் அளிக்கவில்லை என்றார்.

இதேபோல கிரன் கோசவியின் காரில் பொலிஸ் என ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு உள்ளதும் தெரியவந்துள்ளது. எனவே, பொலிஸார் போல நடித்தார் அவர் மீது வழக்குப்பதிவு செய்யவுள்ளதாக மற்றொரு அதிகாரி தெரிவித்திருக்கிறார். மேலும் 25 கோடி ரூபா பேரம் நடந்ததாக எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக ஷாருக்கானின் மேலாளர் பூஜா தத்லானி, ஆர்யன் கான் இருவரிடமும் விசாரணை நடத்துவார்கள் எனவும் பொலிஸார் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இறைவரி திணைக்கள மாவட்ட காரியாலயத்தை அம்பாறையில் திறப்பது தொடர்பில் வலியுறுத்தல்

இறைவரி திணைக்கள மாவட்ட காரியாலயத்தை அம்பாறையில் திறப்பது தொடர்பில் வலியுறுத்தி அல்–மீஸான் பௌண்டேஷன், ஸ்ரீலங்கா கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்திற்கு கோரிக்கை மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்த மகஜரில் கிழக்கு மாகாண இறைவரித்திணைக்கள அலுவலகம் திருகோணமலையிலும், மாவட்டக் காரியாலயம் மட்டக்களப்பிலும் அமைந்துள்ளது. அம்பாறை மாவட்ட வரியிறுப்பாளர்கள் தமது வரியை செலுத்த அல்லது வரி தொடர்பிலான விடயங்களை கையாள திருகோணமலை அல்லது மட்டக்களப்பு காரியாலயத்தை நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை உள்ளது. மிக அதிக தூரம், பிராயணச்செலவுகள், நேர விரயம் என பல்வேறு அசௌகரியங்களை இதனால் வரியிறுப்பாளர்கள் அனுபவித்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டக் காரியாலயம் ஒன்றின் அவசியம் அவசரமாக உணரப்படுவதனால் மாகாண இறைவரித் திணைக்கள மாவட்ட அலுவலகம் ஒன்றினை அம்பாறை மாவட்டத்தில் அவசரமாக நிறுவ நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் குறித்த காரியாலயத்தை அவசரமாக நிறுவ பொருத்தமான இடமாக கல்முனையில் வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான கட்டடத்தில் உள்ள அறைகளை பயன்படுத்த முடியும்.

ஆயிரம் கால் கட்டடத்தொகுதி அல்லது அரசுக்கு சொந்தமானகட்டடங்கள், உள்ளூராட்சிமன்றங்களுக்குரிய கட்டடங்கள் என பல கட்டடங்கள் அம்பாறையில் பாவனையில் இல்லாத கட்டடங்கள் உள்ளன. அவற்றை இந்த தேவைக்கு பயன்படுத்த முடியும் என அந்த மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளனர். அம்பாறை மாவட்ட அலுவலகம் இல்லாமை காரணமாக அம்பாறை அலுவலகத்திற்கென நியமிக்கப்பட்டவர்கள் மட்டக்களப்பு காரியாலயத்தில் இப்போது தற்காலிகமாக பணியாற்றி வருகின்றனர்.



## ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கொரோனா விழிப்புணர்வு குழுதிட்டம்

கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலையின் அனுசரணையுடன் பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமான கொரோனா விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்று புதன்கிழமை கல்முனை அஸ்–ஸுஹறா வித்தியாலயத்தில் தரம் 01 தொடக்கம் 05ம் தர மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் எம்.எச்.எஸ்.ஆர் மஜிதிய்யா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எப் ரிப்சியா, சாய்ந்தமருது ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.என் சூஸான் ஆகியோருடன் வைத்தியசாலையின் பயிலுனர் வைத்தியர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கொரோனா விழிப்புணர்வு செயற்திட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

## திருமலை வீட்டிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை – தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உல்பத்வெவ பகுதியில் வீடொன்றில் இருந்து ஆணொருவரின் சடலமொன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த டபிள்யூ. ஏ.நளீன் சமிந்த (40வயது) என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் இரண்டாவது மனைவியுடன் தனியாக வீட்டில் வசித்து வந்தார் எனவும் கடந்த இரண்டு மூன்று நாள்களுக்கு முன்னர் உயிரிழந்திருந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டின் பெயரில் ஆறுமாதம் சிறையிலிருந்து பிணையில் விடுதலையாகியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலாகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## காட்டு யானைகளின் அட்டகாசம்;

# அழிந்து போன 300 தென்னம்பிள்ளைகள்

*மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் உன்னிச்சை நெடியமடு 6 ஆம் கட்டை பகுதியில் உள்ள வீடொன்றினை காட்டு யானை சேதப்படுத்தியுள்ளது. அப்பகுதியில் நேற்றிரவு (4) கிராமத்திற்குள் புகுந்த காட்டு யானை தென்னை உள்ளிட்ட பயன்தரும் மரங்களை சேதப்படுத்தியுள்ளதுடன் குடியிருந்த வீட்டின் சுவரையும் சேதப்படுத்தியுள்ளது. குறித்த வீட்டிற்குள் ஒரு வயது சிறுமி உள்ளிட்ட 7 பேர் உறங்கிக்கொண்டிருந்த வேளையிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீபாவளி பண்டிகையினை இந்துக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடிவரும் நிலையில் இவ்வாறு பிரதேச மக்கள் அந்த மகிழ்ச்சியினை அனுபவிக்கமுடியாத நிலையே உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருக்கு விசாரணை

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குறித்து முகநூலில் பதிவிட்டமை தொடர்பான விசாரணைக்காக நாளை சனிக்கிழமை (6) மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளதாக தமிழ் தேசிய மக் கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு சத்துருக் கொண்டானில் படுகொலை செய்யப்பட்ட 185 பேரின் 32 வது நினைவேந்தல் கடந்த செப்டெம்பர் மாதம் இடம்பெற இருந்த நிலையில் அங்கிருக்கும் நினைவேந்தல் தூபியில் விளக்கு ஏற்ற அனுமதிக்காத நிலையில் அது தொடர்பாக கிழக்கில் இவ்வாறு அதிகமான படுகொலைகள் நடந்துள்ளன இவற்றுக்கு நீதிவேண்டும் என தனது முகநூலில் பதிவு செய்துள்ளார்.

இது தொடர்பான வாக்கு மூலம் ஒன்றை பெறவேண்டியுள்ளதால் நாளை சனிக்கிழமை மட்டக்களப்பு தலைமையக காவல் நிலைய சமூக பொலிஸ் பிரிவிற்கு வருகை தருமாறு இன்று வெள்ளிக்கிழமை (5) மட்டக்களப்பு நகரிலுள்ள அவரது வீட்டுக்கு பொலிஸார் வந்து கடிதம் ஒன்றை வழங்கியுள்ளனர்.

எனவே பொலிஸார் இந்த செயற்பாடு தொடர்பாக மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளேன் என அவர் தெரிவித்தார்.



# ஆறுதல் வெற்றியுடன் தொடரிலிருந்து வெளியேறியது இலங்கை அணி




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் -12 சுற்றின் நேற்றைய நாளின் இரண்டாவது போட்டியில், இலங்கை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியுடன் இலங்கை அணி நடப்பு ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரிலிருந்து வெளி யேறியுள்ளது.

குழு 1 இற்கான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இலங்கை அணி, 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 189 ஓட்டங்களைச்சேர்த்தது. சரித் அசலங்க 68 ஓட்டங்களையும் பத்தும் நிஸங்க 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அன்ட்ரே ரஸல் 2 விக்கெட்டுக்களையும் பிராவோ 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியால், 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களையே பெற முடிய, இலங்கை அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. சிம்ரொன் ஹெட்மயர் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும் நிக்கலஸ் பூரன் 46 ஓட்டங்களையும் எடுத்தனர். இலங்கை அணியின் பினுர பெனார்டோ, சம்மிக கருணாரத்ன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டு களையும் துஸ்மந்த சமீர, தசுன் சானக இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக சரித் அசலங்க தெரிவுசெய்யப்பட்டார்.

தகுதிகாண் சுற்றில் விளையாடி சூப்பர் - 12 சுற்றுக்குள் நுழைந்த இலங்கையணி, குழு 1 இல் விளையாடிய 5 போட்டிகளில் இரண்டில் வெற்றிபெற்று 4 புள்ளிகளை எடுத்து குழுவில் நான்காமிடத்தையே பெற்றுள்ளது. எனவே, அரையிறுதிச் சுற்றுக்குள் நுழைவதற்கான வாய்ப்பின்றி தொடரிலிருந்து வெளியேறியுள்ளது.

## ஆஸ்திரேலியாவுக்கு அதிரடி வெற்றி வெளியேறியது பங்களாதேஷ் அணி




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் -12 சுற்றின் நேற்றைய முதலாவது போட்டியில் ஆஸ்திரேலிய - பங்களாதேஷ்அணிகள்ஒன்றையொன்று எதிர்கொண் டிருந்தன. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி மிக இலகுவாக 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை மேற் கொள்ள முடிவெடுத்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 15 ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 73 ஓட்டங் களை மட்டுமே எடுத்தது. மீன் ஹொசைன் 19 ஓட்டங்களையும் நய்ம் 17 ஓட்டங்களையும் பெற்றனர். ஆஸ்திரேலிய அணியின் அடம் ஸம்பா 5 விக்கெட்டுகளையும் மிட்செல் ஸ்ட்ராக் மற்றும் ஹசில்வுட் இருவரும் தலா 2 விக்கெட் டுக்களையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து 74 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 6.2 ஓவர்களிலேயே 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கைய டைந்தது. அணித்தலைவர் ஆரோன் பின்ஞ் 40 ஓட்டங்களையும்டேவிட் வோனர்18 ஓட்டங்களை யும் பெற்றுக்கொண்டனர். பங்களாதேஷ் அணியின் டஸ்கின் அஹமட் மற்றும் சொரிபுல் இஸ்லாம் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக அடம் ஸம்பா தெரிவுசெய்யப்பட்டார்.

குழு 1 இல் இடம்பெற்றுள்ள ஆஸ்திரேலிய அணி 4 போட்டிகளில் விளையாடி 3 வெற்றி களையும் 6 புள்ளிகளையும் பெற்று குழுவில் இரண்டாமிடத்தில் உள்ளது.

பங்களாதேஷ் அணி, விளையாடிய 5 போட்டிகளிலும் தோல்வியடைந்து தொடரிலி ருந்து வெளியேறியது.

## சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து மே.இ.தீவுகளின் பிராவோ ஓய்வு



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருடன் சர்வ தேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என மேற் கிந்தியத் தீவுகள் அணியின் நட் சத்திர வீரர் பிராவோ அறி வித்துள்ளார்.

அவர் இதுவரை நடந்த ஏழு ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடியுள்ளார். அவற்றில் 2012 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கிந்தியத் தீவுகள் சம்பி யன் பட்டம் வென்றது. 38 வயதான பிராவோ இதுவரை 40 டெஸ்ட் போட்டிகள், 164 ஒருநாள், 90 ரி-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

தனது ஓய்வுமுடிவு குறித்து தெரிவிக்கும்போது, ‘ஓய்வு பெற நேரம் வந்து விட்டது என நான் நினைக்கிறேன். நான் கிரிக்கெட்டில் சிறந்த அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன். 18 ஆண்டுகளாக மேற்கிந்தியத் தீவுகள் அணிக்காக விளையாடியிருக்கிறேன். சில ஏற்ற இறக்கங்கள் இருந்தன. ஆனால் கரீபியன் மக்களையும், அந்தப் பகுதிகளைப் பிரதிநிதிப்படுத்தியதில் நான் பெருமைப்படுகிறேன்’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## ரி-20 தரவரிசையில் துடுப்பாட்டத்தில் பாபர் பந்துவீச்சில் ஹசரங்க முதலிடத்தில்



சர்வதேச ரி-20 கிரிக்கெட் வீரர்களின் புதிய தரவரிசைப் பட்டி யலை சர்வதேச கிரிக் கெட் சபை (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ளது.

இதில், துடுப்பாட்ட வீரர்களின் தர வரிசையில்பாகிஸ்தான் அணி கப்டன் பாபர் அசாம் முதலிடம் பிடித் துள்ளார்.

இங்கிலாந்தின் டேவிட் மலான் 2 ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஆரோன் பிஞ்ச் 3 ஆவது இடத்திலும் நீடிக்கிறார்கள்.

பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் முதல் 6 இடங்களை சுழல்பந்து வீச்சா ளர்கள் ஆக்கிரமித்துள்ளனர். முதலி டத்தில் இலங்கையின் ஹசரங்க, 2 ஆவது இடத்தில் தென்னாபிரிக்காவின் ஷம்சி, 3 ஆவது இடத்தில் இங்கிலாந்தின் அடில் ரஷிட் மூவரும் நீடிக்கின்றனர்.

சகலதுறை வீரர்களின் தரவரிசை யில் ஆப்கானிஸ்தானின் முகமது நபி முதலிடத்திலும், பங்களாதேஷ் அணி யின் ஷகிப் அல் ஹசன் இரண்டாம் இடத்திலுமுள்ளனர்.

# கலைகள் தொடர்பில் தேசிய ரீதியில் நிலையான கொள்கை வகுக்கப்படும்

## விதுர விக்ரமநாயக்க உறுதி



நாட்டின் கலைகள் தொடர்பில் தேசிய ரீதியில் நிலையான கொள்கை வகுக்கப்படும் என தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கலைஞர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது நாட்டில் சமூகம் பல்வேறு வழிகளிலும் கூறுபட்ட நிலையில் இருக்கின்றது. அதனைக் கலைகள் ஊடாக ஒன்றிணைக்க முடியும். அதனால் அதனை இனங்கண்டு நாம் முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றோம்.

இந்த மாவட்டத்தின் கலைஞர்கள் முன்வைத்த கோரிக்கைகள் மற்றும் அவர்களது சிபார்சுகள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவதுடன், அதனைத் தீர்த்து வைக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாகப் பொருளாதாரப் பிரச்சினையால் முழு உலகமும் பாதிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் புதிதாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

நாங்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லி கலையிலிருந்து விலகிச் செல்லாது இருக்க வேண்டும். எமது பாடசாலைப் பிள்ளைகளுக்கும் கலைகள் தொடர்பில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

கலைகளில் ஆர்வம் உள்ள சிறுவர்களை இனங்கண்டுள்ளோம். அவர்களையும் இணைத்துக் கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். களத்தில் கலைஞர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். அதனை ஆராய்ந்து பட்டியல்படுத்தி எமது அமைச்சுக்குத் தர முடியும்.

மக்களைத் திருப்திப்படுத்துவது மற்றும் மக்களை சந்தோஷப்படுத்துவது தொடர்பில் நாம் எல்லோரும் சிந்திக்க வேண்டும். தேர்தல் காலங்களில் மக்களை வீடு வீடாகச் சென்று மதிக்கிறார்கள். தேர்தல் முடிந்த பின் மக்கள் தான் தேர்தலில் வென்றவர்களைத் தேட வேண்டியுள்ளது. அது தான் நடக்கிறது.

அந்த நிலை மாறி மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும். இன்றைய இளம் சந்ததியினருக்குச் சாப்பாடு இல்லை என்றாலும் பரவாயில்லை கையில் தொலைபேசி இருந்தால் போதும் என்ற நிலை உள்ளது. வீட்டில் உள்ள தாய், தந்தையர், சகோதரர்களுடன் கதைக்க நேரமில்லாது தொலைபேசியில் இளம் சமூகம் காலத்தைக் கடத்துகிறது.

ஆகவே தொழில்நுட்பத்துக்கு அடிமைப்பட்ட நிலை காணப்படுகின்றது. இந்த அடிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கக் கூடிய சக்தியும், பலமும் கலைக்குத் தான் இருக்கிறது.

கலைக்கு நாங்கள் நீண்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். கலைஞர்களை மேலும் பலப்படுத்த வேண்டும். கலைகளுக்காகப் பணத்தை ஒதுக்குகின்றோம். அந்த பணம் முடிந்த பின் அவை அவ்வாறே நிற்கின்றன. இதை சரி செய்ய வேண்டும்.

இதற்கான ஒரு கொள்கை இல்லை. ஒவ்வொரு அரசாங்கமும் மாறும் போது அதில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அமைச்சர்கள், அமைச்சின் அதிகாரிகள் மாறுகிறார்கள். எனவே அரசாங்கம், அமைச்சர், அதிகாரிகள் மாறினாலும் மாறாத வகையில் ஒரு கொள்கை இருக்க வேண்டும்.

அதனால் தான் நாம் கலை, அழகு என்பவற்றை உள்ளடக்கி தேசிய ரீதியில் ஒரு நிலையான கொள்கையை வகுக்க வேண்டும் என எண்ணியுள்ளோம். அது எவராலும் மாற்றப்படாததாக இருக்க வேண்டும். தேசிய கொள்கைத் திட்டத்தின் ஊடாக கலை, கலாசாரம், அருங்கலைகள், இளம் கலைஞர்கள் ஆகியோரைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

நாங்கள் தமிழ், ஹிந்தி படங்களைப் பார்த்தோம். தமிழர்களிடம் பாரம்பரிய கலை பண்பாடுகள் இருந்தன. அதனையும் நாம் பாதுகாக்க வேண்டும். நாம் இனம், மதம், மொழி எனப் பல கூறுகளாக வேறுபட்டுள்ளோம். நாங்கள் இவற்றைக் கலையால் இணைக்க வேண்டும்.

ஆகவே இருளிலிருந்து பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்த இருளை நீக்க ஒளியை ஏற்றுவோம். வடக்குக்கான விஜயமாக வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்துள்ளேன். தொல்பொருள் சின்னங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தியுள்ளோம். அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

அத்துடன் கலைஞர்களைச் சந்தித்து அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டுள்ளோம். வடக்கில் கலைஞர்கள் எதிர்நோக்கும் அதே பிரச்சினையைத் தான் தெற்கிலும் கலைஞர்கள் எதிர்நோக்குகிறார்கள்.

அவற்றில் எந்த மாற்றமுமில்லை. ஆகையால் கலை தொடர்பில் தேசிய ரீதியில் கொள்கை வகுக்கப்பட்டால் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்படும். அதற்கான நடவடிக்கையை எடுத்து நாம் முன்னோக்கி நகர்கின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# கொரோனா தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்க அரசு அவதானம்!

## அமைச்சர் கெஹலிய தகவல்



பொது இடங்களுக்குப் பிரவேசிப்பதற்காக, கொரோனா தடுப்பூசி அட்டையைக் கட்டாயமாக்குவது தொடர்பாக அவதானம் செலுத்தப்படுவதாக, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினன், சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில், உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதியும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, கருத்து தெரிவித்த இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர், கனடாவில் பொது இடங்களுக்குப் பிரவேசிக்கும்போது, கொரோனா தடுப்பூசி அட்டையைக்கொண்டு செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தொற்றிலிருந்து பாதுகாக்கவும் ஏனையவர்களுக்கும் அது பரவுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசி ஏற்றத்தை, இலங்கையர்களுக்கு வழங்க ஆரம்பித்தமை மிகச் சிறந்த நடவடிக்கையாகும் என்றும் எதிர்காலத்தில் அது ஏனைய தரப்பினருக்கும் வழங்கப்படுமாயின் சிறந்ததாகும் என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்து கருத்து தெரிவிக்கும்போதே, ஐரோப்பிய நாடுகளில் பொது இடங்களுக்குத் தடுப்பூசி அட்டையைக் கொண்டு செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில், அதனை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுவ தாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

# அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஆதரவாக விரிவுரையாளர்களும் போராட்டத்தில் குதிப்பு!

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டு பிரச்சினைகளுக்கு ஆதரவு வெளியிட்டு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நாவலவில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழகத்துக்கு எதிரில் போராட்டம் நடத்தப்பட உள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் மற்றும் பல்கலைக்கழக சமூகம் என்பன இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுக்க உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நிபந்தனை அற்ற அடிப்படையில் அதிபர், ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்காக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இவ்வாறு போராட்டத்தில் குதிக்க உள்ளனர் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 9ஆம் திகதி தேசிய போராட்ட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து துறைகளைச் சேர்ந்தவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்கேற்க உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், 2022ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் தீர்வு வழங்கப்படாவிட்டால் கடுமையான போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# ‘ஒரே நாடு – ஒரே சட்டம்’ செயலணி குறித்து நீதியமைச்சர் ஜனாதிபதி இடையில் சந்திப்பு?



நீதியமைச்சர் அலி சப்றி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து 'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணி தொடர்பாக தனது கவலைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்கொட்லாந்தில் இருந்து நாடு திரும்பிய ஜனாதிபதியை சப்றி சந்திப்பார் என தகவல் கிடைத்ததாக ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும் அவர்கள் எப்போது சந்திப்பார்கள் என்ற சரியான திகதி உடனடியாகத் தெரியவில்லை எனவும் கூறப்படுகிறது.

‘ஒரே நாடு ஒரே சட்டம்’ தொடர்பான வரைவை தயாரித்து அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்துக்குள் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையிலான செயலணியை நியமித்தமை தொடர்பாக அலி சப்றி ஏமாற்றமடைந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

செயலணியை நியமிப்பதற்கு முன்னர் அமைச்சர் அலி சப்றியிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், நீதியமைச்சரிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளக்கமளித்தார் என ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க இந்த வாரம் தெரிவித்தார். இந்த செயலணியை நியமிக்கும் நடவடிக்கையை நீதியமைச்சர் ஆரம்பத்தில் அறிந்திருக்க வாய்ப்பில்லை எனவும் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். மேலும் ஜனாதிபதி பின்னர் நீதியமைச்சரை சந்தித்து செயலணியின் நியமனம் தொடர்பாக விளக்கமளித்தார் என அவர் கூறியுள்ளார். எவ்வாறிருப்பினும் குறித்த செயலணி நியமனத்தில் நீதியமைச்சர் திருப்தியடையவில்லை என்றும் ஜனாதிபதியை சந்தித்து அவர் தனது கவலைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2021இல் வெளியிடப்பெற்றது.